4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 434/2019 நாள்: 05.11.2025 வா.சா.2 – செல்வராஜ்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் தாராபுரம் தாலுகா, நஞ்சப்பகவுண்டன்புதூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து கொண்டம்பட்டி கிராமத்தில் உள்ளது. நான் குடியிருக்கும் இடத்திற்கும், கொண்டம்பட்டி கிராமத்திற்கும் இடையே 26 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 1வது வாதி பாபிரிவினை ஏற்கனவே ஏற்படுத்தியது சரியல்ல என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிகளுக்கு நான் தாய்மாமன் என்றால் சரிதான். மேற்படி உறவுமுறையை நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி முதல்விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தை 1வது வாதி சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.376, 423 என்று நினைக்கிறேன். அதன் எல்கை பற்றிய விவரங்கள் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. 3வது பிரதிவாதி துரைசாமி எனக்கு மைத்துனர். வாதி மற்றும் 3வது பிரதிவாதி துரைசாமி ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள் என்றால் சாட்சி தற்போது ஒன்றாக வசித்து வருகிறார்கள், முன்பு தனியாக தான் வசித்து வந்தார்கள் என்று கூறுகிறார். வாதிகளின் சுவாதீனத்தை 2வது பிரதிவாதி ரத்தினசாமி எப்போது இடைஞ்சல் செய்தார் என்றால் சாட்சி தேதி ஞாபகம் இல்லை, 2018 ம் வருடம் இடைஞ்சல் செய்தார். 2வது பிரதிவாதியிடம் வாதிகள் எப்போது பாகபிரிவினை கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி கேட்டார்கள், எந்த தேதியில்

கேட்டார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வாதிகள் முதலில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள், அது பைசல் பேசப்பட்டு முடிக்கப்பட்டது. பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வாதிகள் இதே நீதிமன்றத்தில் முதலில் வழக்கு தாக்கல் செய்தார்கள். எனக்கு வழக்கு விவரம் பற்றி தெரியாது, நான் வாதிகளின் தாய்மாமன் என்ற முறையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாத காரணத்தினால் தான், வாதிகளுக்கு தாய்மாமன் என்ற உறவுமுறையை மறைத்து முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.05 18:00:48 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.